NEETHIDEVADHAI MONTHLY MAGAZINE

# நீதிதேவதை

மாத இதழ்

www.neethidevadhai.com

நீதியை தேடி நெடும்பயணம்

ஆண்டு - 14 இதழ் -8 செப்டம்பர் - 2026 விலை: ரூ.12/-
Volume - 14 Issue -8 September - 2026 Price: Rs.12/-



## பள்ளிக் கல்விக்கு ஏராளமான சலுகைகள்

- அமைச்சர் ராஜமோகன்

## நேபாள துயரம்

### தனித்தொகுதி வார்த்தை வேண்டாம்

### தகைசால் தமிழர் கிருஷ்ணசாமி

### ஏழை எளிய மக்களின் சேமிப்பு கணக்கிற்கு கட்டணம் விதிக்கும் மோடி அரசு


நான்காம் ஆண்டு
நினைவு அஞ்சலி
செப்டம்பர் 13
தெய்வத்திரு.
E. சாந்தி அம்மாள்
அவர்கள்
ஆறுதல் சொல்ல ஆயிரம்
உறவுகள் இருந்தாலும்
உந்தன் உறவுபோல் வருமா?
நீங்கா நினைவில்...
கணவர்
ஆர். இளங்கோவன்
மற்றும் குடும்பத்தினர்
சாந்தா பேன்ஸி ஜுவல்லர்ஸ்
ஸ்ரீ லட்சுமி ராசிக்கல் மோதிரம்
No10. இன்பென்ட்ரி ரோடு,
ஸ்ரீ வெங்கடேசுவரா மேல்நிலைப் பள்ளி அருகில். வேலூர் - 1
செல். 93624 81640, 90806 86494

# நீதி தேவதை
பல்சுவை மாத இதழ்

**C. சரவணன்,** M.A.B.L.,
ஆசிரியர் / வெளியீட்டாளர்
கைபேசி எண்: 98849 56002

**M. மீனாட்சி சுந்தரம்** M.A.B.Lit.,
இணை ஆசிரியர்

**S. நரேஷ்குமார்** D.H.M.C.T.,
உதவி ஆசிரியர்

**P. அசோக்குமார்**
துணை ஆசிரியர்

**I. ஞானமணி**
தலைமை நிருபர்

**மாவட்ட நிருபர்கள்:**
**P. முருகானந்தம்,** திருவள்ளூர்
**S. கமலக்கண்ணன்,** செங்கல்பட்டு
**V. பாலாஜி,** சென்னை
**S. பிரதீப்,** கோயம்பத்தூர்
**C. கோமதி நாயகம்,** தூத்துகுடி வடக்கு
**P. மாரிமுத்து,** திருநெல்வேலி
**P.R.S. திரவியகண்ணன்,** தென்காசி
**D. ராஜேஷ்,** தூத்துகுடி தெற்கு
**முருகேசன்,** திண்டுகல்

**S. அருளாநந்தம்,** M.A.B.L.,
சட்ட ஆலோசகர்

**நிர்வாக அலுவலகம்**
No:68/30, தெற்கு உஸ்மன் தெரு,
தியாகராய நகர், சென்னை–17.
Website-www.neethidevadhai.com
E.mail-info@neethidevadhai.com


# ஆழ்ந்த அனுதாபம்



நேபாளத்தில் ஏற்பட்ட பேரிடரில் உயிரிழந்தவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம். தங்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். உயிரிழந்தோருக்கு நீதி தேவதை இதழின் கண்ணீர் அஞ்சலி.

– **ஆசிரியர்**


# நிருபர்கள் தேவை

எமது நீதிதேவதை மாத இதழுக்கு மாவட்டம் மற்றும் தாலுகா வாரியாக நிருபர்கள் தேவை. துடிப்பான இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம். புகைப்படத்துடன் தங்களை பற்றிய முழு விபரங்களை அனுப்ப வேண்டிய

வாட்சப் எண்: **98849 56002**

email: neethidevadhai@rediffmail.com




# “100 நாள் ஆட்சி ஒரு யுகத்திற்கான மனசாட்சி!” – திட்டங்களை பட்டியலிட்டு முதல்வர் விஜய் வெளியிட்ட அதிரடி வீடியோ!

சென்னை: தவெக அரசின் 100 நாள் ஆட்சியில் நிறைவேற்றப்பட்டதாக கூறப்படும் முக்கிய திட்டங்கள் மற்றும் அறிவிப்புகளை பட்டியலிட்டு முதல்வர் விஜய் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

‘100 நாள் ஆட்சி; ஒரு யுகத்திற்கான மக்களின் மனசாட்சி’ என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இந்த வீடியோவில், தமிழக அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

முதல்வர் விஜய் பட்டியலிட்டுள்ள முக்கிய திட்டங்கள்:

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை.

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்துக்கு ரூ.560 கோடி ஒதுக்கீடு.

வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு மூலம் ரூ.1 லட்சம் கோடி முதலீடு.

717 மதுபானக் கடைகள் மூடல்.

12 லட்சம் மாணவர்கள் மற்றும் 1 லட்சம் இளைஞர்களுக்கு வெற்றித் திறன் பயிற்சி.

ஜிழிகூஷிணிஜிஜிஸிமி திட்டத்தின் கீழ் கிராமப்புற சுகாதாரம், குடிநீர் மற்றும் சாலை மேம்பாட்டுக்கு ஆண்டுக்கு ரூ.6,000 கோடி ஒதுக்கீடு.

போதைப்பொருள் ஒழிப்புக்காக 65

சிறப்பு அதிரடிப்படைகள்.

அண்ணனின் சீர் திருமண நன்னாளில் 8 கிராம் தங்க நாணயம் மற்றும் பட்டுப்புடவை வழங்கும் திட்டத்துக்கு ரூ.812 கோடி ஒதுக்கீடு.

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4,000 மற்றும் நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,750 சிறப்பு ஊக்கத்தொகை.

வெற்றி வீடு திட்டத்துக்கு ரூ.3,500 கோடி ஒதுக்கீடு.

வெற்றி 150 திட்டத்தின் மூலம் 150 நாட்கள் உத்தரவாத வேலைவாய்ப்பு.

வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்புத் திட்டம்.

200 யூனிட் வரை கட்டணமில்லா மின்சாரம்.

பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்துக்கு ரூ.710 கோடி ஒதுக்கீடு.

விவசாயிகளுக்கு ரூ.6,000 கோடி பயிர்க்கடன் தள்ளுபடி.

வெற்றி மடிக்கணினித் திட்டத்துக்கு ரூ.2,000 கோடி ஒதுக்கீடு.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ஹெல்மெட், வாட்டர் பாட்டில் உள்ளிட்ட வசதிகளுடன் நவீன பிராண்டட் மிதிவண்டிகள்.

வெளிப்படையான மற்றும் நேர்மையான நிர்வாகத்தை உறுதி செய்யும் வகையில், பல அடுக்குமாடி கட்டடங்களுக்கு சிவிஞ்கி அளவிலேயே திட்ட அனுமதி மற்றும் நேரடி தொடர்பற்ற பத்திரப்பதிவு.

100 நாள் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் முதல்வர் விஜய் இந்த வீடியோவை வெளியிட்டுள்ளார்.


# விளம்பர கட்டணம்

அன்பார்ந்த வணிக பெருமக்களே! வணக்கம். தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்களிலும் மக்கள் கைகளில் தவழ்ந்துக் கொண்டிருக்கும் எமது நீதிதேவதை மாத இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள். எப்போது வேண்டுமானாலும் எடுத்துப் பார்த்தால் மகிழ்ச்சி தரும் அச்சுத்துறையில் விளம்பரம் செய்து மேம்படுவீர்...

| | |
|---|---|
| கடைசி பக்கம் அட்டை கலர் | ரூ. 15,000/- |
| உள்பக்கம் கலர் | ரூ. 10,000/- |
| கறுப்பு / வெள்ளை முழுபக்கம் | ரூ. 5,000/- |

விளம்பர நிர்வாகி

**நீதிதேவதை மாத இதழ்**

தொலைபேசி : 98849 56002, 99625 21524

# தனித் தொகுதி" என்ற வார்த்தையே தண்டனை போல் உள்ளது! சட்டசபையில் தவெக எம்.எல்.ஏ. சிந்து அதிரடி கோரிக்கை



தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 'தனித் தொகுதி' என அழைக்கப்படும் தொகுதிகளுக்கு வழங்கப்படும் இந்த பெயரே, சமூகத்தில் ஒரு பிரிவினை அல்லது தனிமைப்படுத்தலை குறிக்கும் வகையில் இருப்பதாகக் கூறி, அதற்கு மாற்றாக 'சிறப்பு உரிமை' போன்ற பொருத்தமான சொல்லை பயன்படுத்த வேண்டும் என குடியாத்தம் தொகுதி தவெக எம்.எல்.ஏ. சிந்து வலியுறுத்தினார். அவரது கோரிக்கையை பரிசீலிப்பதாக சபாநாயகர் தெரிவித்தது பேரவையில் கவனம் பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில், துறைகள் வாரியான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. நேற்று (27082026) பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் மற்றும் சமூகநீதித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது.

இதில் பேசிய குடியாத்தம் தொகுதி தவெக எம்.எல்.ஏ. சிந்து, தனது அலுவலகத்திற்கு வரும் கடிதங்களில் கூட அடைப்புக்குறிக்குள் 'தனித் தொகுதி' என்ற வார்த்தை குறிப்பிடப்படுவதாகக் கூறினார்.

"'தனி' என்ற சொல் பொதுவான பயன்பாட்டில் பிரிவினை அல்லது தண்டனை போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்துகிறது. 'அந்த பெண்ணை தனியாக வையுங்கள்', 'அவனை தனிமைப்படுத்துங்கள்', 'அவனை சிறையில் வையுங்கள்' என்று கூறுவது போன்ற எண்ணத்தை இந்த வார்த்தை ஏற்படுத்துகிறது.

இடஒதுக்கீடு என்பதற்கு 'தனி' என்பது நேரடியான அர்த்தம் அல்ல. அரசியலமைப்புச் சட்டத்தின் 332வது பிரிவின் கீழ் பட்டியலின மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு உரிமையை கருத்தில் கொண்டு, 'தனித் தொகுதி' என்ற சொல்லுக்குப் பதிலாக 'சிறப்பு உரிமை' போன்ற பொருத்தமான சொல்லை பயன்படுத்த வேண்டும்" என அவர் கோரிக்கை வைத்தார்.

மேலும், "தமிழில் ஒரு சொல் வெல்லும்; ஒரு சொல் கொல்லும்" எனக் குறிப்பிட்ட எம்.எல்.ஏ. சிந்து, பெயரிலேயே ஒரு பிரிவினை உணர்வு ஏற்படாத வகையில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என வலியுறுத்தினார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர், எம்.எல்.ஏ. முன்வைத்துள்ள யோசனையை முதல்வர் மற்றும் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று, உரிய முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தார்.

ஒரு வார்த்தை என்பது வெறும் வார்த்தை அல்ல; அது ஏற்படுத்தும் எண்ணமும் முக்கியம். 'தனித் தொகுதி' என்ற சொல்லை மாற்ற வேண்டும் என்ற இந்த கோரிக்கை, பேரவையில் சாதாரண கோரிக்கையாக மட்டுமின்றி, சொல்லாட்சியிலும் சமூகநீதியிலும் கவனம் செலுத்த வேண்டிய விவாதமாக மாறியுள்ளது

# வல்லம் டி.எஸ்.பி. காயத்ரி காத்திருப்போர் பட்டியலில் தூக்கி அடிக்கப்பட்டார்!



தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் சரக டி.எஸ்.பி., காயத்ரி, தனது காவல் சரகத்தில் செம்மண் கடத்தலைத் தடுக்கத் தவறியதாக எழுந்த புகார்கள் உள்ளிட்ட நிர்வாக காரணங்களின் அடிப்படையில், காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வல்லம் சரக டி.எஸ்.பி.யாக கடந்த 2025 டிசம்பரில் பொறுப்பேற்ற காயத்ரி, தனது கட்டுப்பாட்டில் நடைபெறும் செம்மண் கடத்தலைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என புகார்கள் எழுந்ததாக கூறப்படுகிறது.

இந்தப் புகார்கள் காவல்துறை உயர் அதிகாரிகளின் கவனத்திற்கும் சென்றதாகத் தெரிகிறது.

இதற்கிடையே, விவசாயிகள் போராட்டத்தின் போது அவர்களை ஒருமையில் பேசியதாக எழுந்த சர்ச்சை மற்றும் மாவட்ட நிர்வாக அலுவலகத்திற்கு மனு அளிக்க வரும் பொதுமக்களை முறையாக அணுகவில்லை என்ற புகார்களும் பரபரப்பை ஏற்படுத்தின.

இதையடுத்து, சென்னைக்கு வரவழைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்ட நிலையில், நிர்வாக காரணங்களுக்காக காயத்ரியை காத்திருப்போர் பட்டியலில் வைக்க தமிழக காவல்துறை தலைமை உத்தரவிட்டதாக கூறப்படுகிறது.

இன்ஸ்பெக்டரும் காத்திருப்போர் பட்டியலில்

தஞ்சாவூர் தெற்கு காவல் நிலைய இன்ஸ்பெக்டர் சுதாவும், புகார் மனுக்களை முறையாக விசாரிக்காமல் காலதாமதம் செய்ததாகவும், மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு எதிரே பொருள்காட்சி நடத்த அனுமதி வழங்கியதில் உரிய விசாரணை மேற்கொள்ளவில்லை என்றும் புகார்கள் எழுந்தது.

இந்த நிலையில் அவரும் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மண் கடத்தல் உள்ளிட்ட புகார்களில் காவல்துறையின் கண்காணிப்பு எவ்வளவு முக்கியம் என்பதை இந்த நடவடிக்கைகள் மீண்டும் அறிவுறுத்தி இருக்கின்றன.

# நீண்ட கால பிறப்பு -இறப்புக்களை இப்போது பதிவு செய்ய முடியுமா?





பா.ஸ்ரீகுமார் இரா. சுந்தரமதுரா
வழக்கறிஞர்கள்

பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. பள்ளியில் சேரவும், கடவு சீட்டு பெறவும் இன்ன பிற சான்றிதழ்களுக்கும் பிறப்புச் சான்றிதழ் முக்கியமாக கருதப்படுகிறது. 1955ஆம் ஆண்டு குடியுரிமைச்சட்டப்படி இது பராமரிக்கப்படுகிறது, இந்திய குடியுரிமை என்பது பிறப்பினாலேயே வருகிறது. மற்றபி ரிவில் குடியுரிமை பெறுவதற்கும் சட்டம் வழி வகை செய்கிறது. அதற்கு கண்டிப்பாக பிறப்புச் சான்றிதழ் தேவைப்படுகிறது. இது இந்திய பிறப்பு இறப்பு பதிவு சட்டம் 1969 பிறப்பு மற்றும் இறப்பு பதிவை கட்டாயமாக்குகிறது.

இறப்புச் சான்றிதழ் என்பது வாரிசுச் சான்றிதழ் மற்றும் ஓய்வூதியம் மற்றும் சொத்து மாற்றம் போன்றவைகளுக்கு இன்றியமையாததாகிறது.

நாம் ஏதோ ஒரு காரணத்தினால் பிறப்பு மற்றும் இறப்பினை பதிவு செய்யாமல் விட்டுகிறோம். பல காலங்கள் கடந்த பிறகு நமக்கு அது தேவைப்படும்போது நாம் அதற்கு விண்ணப்பிக்க முடியுமா? நம்மால் அத்தகைய பிறப்பு அல்லது இறப்பிற்கு சான்றிதழ் பெற முடியுமா? என்பதைத்தான் இதில் பார்க்க இருக்கிறோம்.

ஒரு இறந்தவர் அல்லது பிறந்தவர் ஊராட்சியை சேர்ந்தவராயிருந்தால் கிராம நிர்வாக அலுவலர் அல்லது தாசில்தாரும், டவுன் பஞ்சாயத்து பகுதியை சார்ந்தவராயிருந் தால் செயல் அலுவலரும், நகராட்சியாக இருந்தால் நகராட்சி ஆணையரும், மாநகராட்சியாக இருந்தால் மாநகராட்சி ஆணையரும், பாளையம் என்ற சொல்லப்படுகிற கண்டோன்மெண்ட்டாக இருந்தால் செயல் அலுவலரும் சான்றிதழ் வழங்கும் அலுவலராக செயல்படுகிறார்கள்.

இவ்வாறு காலம் கடந்து பிறப்பு இறப்புச் சான்றிதழ் பெறுவதில் உள்ள சிரமத்தை போக்க தமிழக அரசு G.O.Ms.No. 324 Revenue and Disaster Management Department Revenue Administration Wing R.A.(3) Section dated 28.062023 என்ற அரசாணையை வெளியிட்டு வழிமுறைகளை வகுத்தது.

மேற்சொன்ன அரசாணையின் படி காலம்தாழ்ந்து பிறப்பு இறப்பு சான்றிதழ் விண்ணபிப்பவர்கள் அந்த எல்லைக்கு உட்பட்ட வருவாய் கோட்டாட்சியரிடம் மனு செய்ய வேண்டும். அதற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், பிறப்பு பதிவு செய்யப்படவில்லை என்ற சான்றிதழ் (பிறப்பு ஆண்டுக்கு முந்தைய மற்றும் பிந்தைய ஆண்டுக்கும்) , அடையாள அட்டை மற்றும் பிரமாண பத்திரம் மற்றும் விண்ணப்பத்தில் ரூ.10க்கான நீதிமன்றவில்லை ஒட்டப்படவேண்டும். பிரமாணப் பத்திரத்தில் தவறான தகவல்களை அளித்திருந்தால் விண்ணப்பதாரர் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கலாம் என்று கட்டாயமாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

அந்த விண்ணப்பத்தை பெற்றுக்கொண்ட வருவாய் கோட்டாட்சியர் அது சரியாக இருந்தால் விண்ணப்பதாரரை செய்தித்தாளில் ஒரு அறிவிக்கை வெளியிட்டு யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் ஒரு மாத காலத்திற்குள் தெரியப்படுத்த வேண்டும் என்றும் தெரியப்படுத்தச் சொல்வார். அந்த கால அவகாசத்திற்கு பிறகு எந்தவித ஆட்சேபணையும் பெறப்படவில்லையென்றால் அவர் அந்த விண்ணப்பத்தை கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பி அவரது அறிக்கையை வருவாய் ஆய்வாளர் மற்றும்

வட்டாட்சியர் மூலமாக பெறுவார். இதற்கு ஒவ்வொருவகுக்கும் அறிக்கை அளிக்க 2 வார காலம் அவகாசம் வழங்கப்படும். அனைத்து அறிக்கைகளும் சரியாக இருந்து அவர்கள் பிறப்பு சான்றிதழ் வழங்கலாம் என்றும் சான்று வழங்கியிருந்தால் தக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு அதனை தகுந்த பதிவாளருக்கு அனுப்பி அதன் நகலை மனுதாரருக்கு அனுப்பி அதற்குண்டான தொகையான ரூ.500/ செலுத்த அறிவுறுத்து வார். மனுதாரர் அந்த தொகையினை செலுத்தி அந்த பதிவாளரிடமிருந்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதே நடைமுறைதான் இறப்புச் சான்றிதழுக்கும் கடைபிடிக்கப்படும். அதற்கு மேற்சொன்ன ஆவணங்களை தவிர மயான பொறுப்பாளரின் அறிக்கை அல்லது புதைக்கப்பட்டிருப்பின் புதைக்கப் பட்டதற்கான சான்றிதழ் ஆகியவைகளை இணைக்கவேண்டும். விபத்து, கொலை அல்லது தற்கொலை ஆகிய காரணங்களினால் இறந்திருந்தால் முதல் தகவல் அறிக்கை மற்றும் பிணக்கூராய்வு அறிக்கையும் சமர்ப்பிக்க வேண்டும். 7 வருடமாக காணாமல் போனவருக்கு இறப்புச் சான்றிதழ் தேவைப்பட்டால் அவர்கள் தகுந்த உரிமை யியல் நீதிமன்றத்தின் மூலம் பெறப்பட்ட “இறந்துவிட்டார்” என்கிற ஆணையையும் இணைக்க வேண்டும்.

இது இன்றைய நிலவரம். ஆனால் மத்திய அரசு 2026 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ம் நாள் பிறப்பு இறப்பு பதிவுச் சட்டம் 1969க்கு ஒரு திருத்தம் கொண்டுவந்திருக்கிறது. அது ஜனாதிபதியின் ஒப்புதல் பெறப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டுவிட்டது, ஆனால் என்று நடைமுறைக்கு வரும் என்ற அறிவிக்கை வெளியிடப்படவில்லை. மேற்சொன்ன திருத்தம் அமுலுக்கு வந்துவிட்டால் நாம் முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதியின் ஆணையின் பேரில் தான் தாமத பிறப்பு மற்றும் இறப்பினை பதிவு செய்ய இயலும்.

ஆகவே மேற்சொன்ன இன்னல்களை தவிர்க்க பிறப்பு மற்றும் இறப்பினை உடனடியாக பதிவு செய்து தக்க சான்றிதழ்களை வாங்கி வைத்துக்கொண்டால் எவ்வித இன்னல்களுக்கும் இடம் தராமல் இருக்கலாம்.

# ஒரே பர்மிட்... 150 லோடு மண் கொள்ளை! நாட்றம்பள்ளியில் விதிமீறல் குற்றச்சாட்டு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா?

திருப்பத்தூர்: நாட்றம்பள்ளி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில், விவசாய நிலங்களைச் சீரமைக்க வழங்கப்படும் மண் அள்ளும் பர்மிட் தவறாக பயன்படுத்தப்படுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

30 லோடு பன்னெடுத்துக்கொள்ள பர்மிட் வழங்கினால் அதை வைத்துக் கொண்டு 150 லோடு மண்ணை கடத்துகிரார்களாம்.

இதுகுறித்து தகவல் பெற்ற செய்தியாளர்கள், செய்தி வெளியிடுவதற்கு ஏதுவாக,இதன் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ள சம்பவ இடத்துக்கு சென்றால், வட்ட அளவிலான அதிகாரி அடியாட்களை வைத்து மிரட்டுவதும், ஆபாசமாக பேசுவதும், கொச்சைப்படுத்தி விமர்சனம் செய்வதையும் வாடிக்கையாக கொண்டு இருக்கிறாராம். இதற்காகவே அவரிடம் பல அல்லக்கைகள் உள்ளனராம்.

அதேபோல்,பர்மிட் வழங்கிய பிறகும் களத்தில் கண்காணிப்பு இல்லாததால் மண் மாஃபியாக்கள் அத்துமீறுவதாகவும், நாட்றம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தின் செயல்பாடு குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மணல் மாஃபியாக்கள் சுதந்திர தினத்தன்று கூட மண் திருடி இருக்கிறார்கள்.

இதையும் வட்ட அலுவலர்கள் கண்டுகொள்ளாமல், திருட்டு மண்ணள்ளும் வாகனங்களை பத்திரமாக அனுப்பி வைத்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

எனவே, மாவட்ட நிர்வாகம் பர்மிட் விவரங்கள், அள்ளப்பட்ட மண்ணின் அளவு மற்றும் விதிமீறல்கள் குறித்து முழுமையான விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பு: இச்செய்தி பொதுமக்கள் முன்வைத்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் வெளி யிடப்படுகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விளக்கம் அளிக்க முன்வந்தால், அதையும் பரிசீலித்து செய்தி வெளியிடப்படும்.

# பஞ்ச பூதங்களில் நீருக்கு மட்டும் ஏன் இவ்வளவு சக்தி? விஞ்ஞான பூர்வமான உண்மை

நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்களில் நீர் தான் மிகவும் சாந்தமானது போல் தெரியும். ஆ ன ா ல் உண்மையில் அதுதான் மிகவும் சக்தி வாய்ந்தது. இதற்கு விஞ்ஞான காரணங்கள் உண்டு.

பிரிக்க முடியாத பிணைப்பு Hydrogen Bonding நீரின் மூலக்கூறு பி2ளி. அதாவது ஒரு ஆக்ஸிஜன், இரண்டு ஹைட்ரஜன். இவை ஒன்றோடு ஒன்று மிக வலுவாக கைகோர்த்துக் கொண்டு, ஹைட்ரஜன் பாண்டிங் எனும் பிரிக்க முடியாத பிணைப்பால் இணைந்திருக்கும்.

அவற்றை பிரிப்பது அவ்வளவு எளிதல்ல. வெள்ளத்தின் போது பெரிய பெரிய பாறைகளையும், வீடுகளையும் கூட பஞ்சு மிட்டாய் போல தூக்கிச் செல்லும் வலிமை கிடைப்பதற்கு காரணம் இந்த பிணைப்பு தான். நெருப்பைக் கூட அணைக்கும் வல்லமை நெருப்பு எரிய வெப்பம், எரிபொருள், ஆக்ஸிஜன் மூன்றும் வேண்டும். நீரை ஊற்றும் போது அது ஒரே நேரத்தில் இரண்டு வேலைகளை செய்கிறது:

நீர் நெருப்பில் பட்டதும் நீராவியாக மாற நிறைய வெப்பத்தை உறிஞ்சி விடுகிறது. அந்த நீராவி ஒரு போர்வை போல நெருப்புக்கும் காற்றுக்கும் இடையில் புகுந்து ஆக்ஸிஜனை தடுத்து விடுகிறது. அதனால் தான் நெருப்பு உடனே அணைகிறது.

எல்லாவற்றையும் கரைக்கும் தன்மை ஹிஸீவீஸ்மீகூஷீஓணீறீ ஷிஷீறீஸ்மீஸீமீ



நீர் ஒரு சிறந்த கரைப்பான். கடினமான பொருட்களை கூட கொஞ்சம் கொஞ்சமாக கரைத்து, அரித்து, தன்னோடு எடுத்துச் சென்று விடும். நூறு வருடத்தில் ஒரு பெரிய மலையையே கரைத்து பள்ளத்தாக்கை உருவாக்கும் வலிமை நீருக்கு உண்டு.

சுருக்கமாக சொன்னால், நிலம் தாங்கும், காற்று தொடும், நெருப்பு எரிக்கும், ஆகாயம் தன் எல்லையை விரிவாக்கிக் கொண்டே இருக்கும். ஆனால் நீர் மட்டும் தான் எல்லாவற்றையும் தொட்டு, அழித்து, மீண்டும் உருவாக்கும். அ த ன ா ல் தான் நம் முன்னோர்கள் பஞ்ச பூதத்தில் நீரை உயிருக்கு சமமாக வைத்தார்கள்.

வள்ளுவர் கூட இதைத்தான்

"நீரின்றி அமையாது உலகு என்று சொன்னார். நீர் ஒன்றுதான் நம்மை தண்டிக்கவும் செய்யும். மன்னிக்கவும் செய்யும்.



# நேபாள துயரம்

## ஈஷா மைய பக்தர்கள் மாயம்



நேபாளம் மற்றும் திபெத் எல்லைப் பகுதிகளில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு காரணமாக பெரும் அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது. கயிலாய யாத்திரையை முடித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த ஈஷா யோகா மையத்தைச் சேர்ந்த 80 தொண்டர்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு மாயமாகியுள்ளனர் என்ற செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திபெத்தின் சாகா பகுதியில் அமைக்கப்பட்டிருந்த முகாமில் இருந்தபடி, ஈஷா அறக்கட்டளையின் நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் இந்தத் துயரச் செய்தியை வெளியிட்டார். பொதுவாக எந்நிலையிலும் மனவுறுதியுடன் காணப்படும் சத்குரு, இந்தச் சம்பவத்தைக் கூறி உரை நிகழ்த்தும்போது குரல் தழு தழுத்து, மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டார்.

பாதிக்கப்பட்ட குழுவை வழிநடத்திச் சென்ற ஈஷாங்க பிரவீன் என்பவரிடமிருந்து காலை 9.05 மணிக்குத் தகவல் வந்ததாகவும், அதில் அவர்கள் கியிரோங் பகுதியில் உள்ள குடிவரவு (மினீனீவீரீகூஷீணீமீவீஷீஸீ) கட்டிடத்தை அடைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டதாகவும் சத்குரு குறிப்பிட்டுள்ளார். ஆனால், அடுத்த சில நிமிடங்களிலேயே, அதாவது காலை 9.14 மணிக்கு அந்தப் பகுதியையே அடியோடு சுருட்டி எறியும் வகையில் ராட்சத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அலைபோல வந்த வெள்ளம் அந்த முழு கட்டிடத்தையும் நொடிப்பொழுதில் அடித்துச் சென்ற காட்சி அதிர்ச்சியளிப்பதாக உள்ளது

கடந்த வாரமே தாம் அந்த கட்டிடத்தைப் பயன்படுத்தியதாகக் குறிப்பிட்ட சத்குரு, நிலச்சரிவுக்குப் பிறகு பிரவீனின் தொலைபேசி எண் செய லிழந்த நிலையில் இருப்பதாகத் தெரிவித்தார். அவர்கள் எல்லை கடந்து நேபாள பகுதிக்குள் நுழைந்திருந்தால் அவரது தொலைபேசி எண் இயங்கத் தொடங்கியிருக்க வேண்டும், ஆனால் அது நடக்கவில்லை என்பதால், அக்குழுவினர் அனைவரும் வெள்ளம் தாக்கிய அந்த நேரத்தில கட்டிடம் அல்லது அதன் அருகிலேயே இருந்திருக்கக்கூடும் என்ற அச்சம் அதிகரித்துள்ளது.

இந்தப் பேரழிவில் இதுவரை சுமார் 300 பேர் உயிரிழந்திருக்கலாம் என்றும், 1,500க்கும் மேற்பட்டோர் காணாமல் போயிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது. வெள்ளப்பெருக்கால் அப்பகுதியின் பாலம், வீடுகள் மற்றும் சாலை தொடர்புகள் முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளன.

மீட்புப் பணிகளுக்கு உதவுவதற்காகவும், நிலைமையை நேரில் பார்வையிடுவதற்காகவும் அப்பகுதிக்குச் செல்லத் திட்டமிட்டதாகச் சத்குரு தெரிவித்தார். எனினும், பாதைகள் அனைத்தும் சேதமடைந்துள்ளதால் உடனடியாகப் பயணம் மேற்கொள்ள இயலவில்லை. இதனால், சீன, இந்திய மற்றும் அமெரிக்கத் தூதரகங்களின் மூலமாகச் சிறப்பு அனுமதி பெற்று, தாமும் ஒரு சிறிய குழுவும் அங்கு நேரில் சென்று உதவிகளைச் செய்ய முயன்று வருவதாக அவர் கூறினார்.

# தமிழக பொது பட்ஜெட் 'வெற்றி' என்ற பெயரில் பல்வேறு திட்டங்கள்



நடப்பு நிதி ஆண்டுக்கான (2026-27) பொது பட்ஜெட்டை தமிழக நிதியமைச்சர் மரிய வில்சன் தாக்கல் செய்தார். இதில், 'வெற்றி' என்ற பெயரில் பல்வேறு திட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழக சட்டப்பேரவையில் நடப்பு நிதி ஆண்டுக்கான (202627) பொது பட்ஜெட் டைத் தாக்கல் செய்து உரை நிகழ்த்திய நிதியமைச்சர் மரிய வில்சன், "முதல்வர் விஜய் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற இந்த குறுகிய காலத்திலேயே பல துறைகளில் கனிசமான முன்னேற்றங்களும், மக்களின் நம்பிக்கையை பிரதிபலிக்கும் பல முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றி என்பது ஒரு கட்சியின் தனிப்பட்ட வெற்றி அல்ல. ஒட்டுமொத்த தமிழக மக்களின் வெற்றி அது. மக்களின் நலன்களுக்கான பல திட்டங்களை செயல்படுத்தும் நோக்கில், நமது அரசு அறம், பொருள், இன்பத்தை நோக்கமாக வைத்து 10 தூண்களைக் கொண்ட 'வெற்றித் தமிழகம்' தொலைநோக்கு திட்ட ஆவணத்தை வெளி யிட்டுள்ளது.

அதன் அடிப்படையில் திட்டங்களை அடுத்து வருகிற முதலாம், மூன்றாம், ஐந்தாம் ஆண்டுக்குள் நிறைவேற்றத்தக்க திட்டங்களை வகைப்படுத்தி, அவற்றுக்கு செயல் வடிவம் கொடுத்து வருகிறது" என்றார். தொடர்ந்து அவர் பல்வேறு அறி விப்புகளை வெளியிட்டார்.

ரூ.1,375 கோடி ஒதுக்கீடு.

› நீதி நிர்வாகத் துறைக்கு ரூ.2486 கோடி ஒதுக்கீடு

› தமிழகத்தின் பல்வேறு பகுதிகளின் உணவு மற்றும் கலைப் பண்பாட்டை பிரபலப்படுத்தும் நோக்கில் ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு. உணவு மற்றும் கலைத் திருவிழா நடத்தப்படும்.

› ஆண்டுதோறும் 2.5 லட்சம் மூத்த குடிமக்கள் விரும்பிய புனிதத் தலங்களுக்கு அரசு ஏற்பாட்டில் பயணம் செய்ய, அதுவும் குளிர்சாதன வசதி, தரமான தங்குமிடம் மற்றும் உணவு வசதியுடன் பயணிக்க ரூ.20 கோடி ஒதுக்கீடு.

› 200 சிறந்த கலைக் குழுக்களுக்கு ஆண்டுதோறும் 100 நாட்கள் நிகழ்ச்சி வாய்ப்பு. நாட்டுப்புறக் கலைகளும் கலைஞர்களின் வாழ்வாதாரமும் பாதுகாக்க ரூ. 23 கோடி நிதி ஒதுக்கீடு

› சுற்றுலா கலை மற்றும் பண்பாட்டுத் துறைக்கு ரூ.775 கோடி ஒதுக்கீடு

› இந்து சமய அறநிலையத் துறைக்கு ரூ.708 கோடி நிதி ஒதுக்கீடு.

சென்னை நதிகள் கூவம் , அடையாறு ஆறுகள் உலகத் தரத்தில் மறுசீரமைப்பு செய்யப்படும். இதற்காகம் விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். அதன்படி படகு சவாரி, நதிக்கரை நடைபாதை, பொழுதுபோக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு சென்னையின் புதிய அடையாளமாக கூவம் , அடையாறு மாற்றப்படும்.

› நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு 29,863 கோடி ரூபாய் ஒதுக்கீடு

› உலகத்தரம் வாய்ந்த, நீடித்த,



பாதுகாப்பான மற்றும் நிலைத்தன்மை கொண்ட சாலை உட்கட்டமைப்பை வழங்குவது அரசின் முன்னுரிமையாகும். அந்த வகையில் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்துக்கு ரூ.9,300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

› நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு 21,524 கோடி ரூபாய் ஒதுக்கீடு

› சென்னைக்கு 1,000 புதிய கிசி மின்சாரப் பேருந்துகள் வாங்கப்படும். பேருந்துப் பணிமனைகளில் ணிகூஷி உட்கட்டமைப்பு (ணிகூஷி ஞ்ணிறிளிஜி) மேம்பாடு செய்ய ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› போக்குவரத்துத் துறைக்கு மொத்தம் ரூ.13,561 கோடி ஒதுக்கீடு.

போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.7,675 கோடி மானியம் வழங்கப்படும். செயல்திறன் இடைவெளி நிதியுதவி ரூ.2,650 கோடி ஒதுக்கீடு. பங்கு மூலதன உதவி ரூ.1,005 கோடி ஒதுக்கீடு

› சென்னையில் 3 புதிய மெட்ரோ வழித்தடங்ள்: விமான நிலையம் கிளாம்பாக்கம், கோயம்பேடு பட்டாபிராம், பூந்தமல்லி சுங்குவார்சத்திரம் ஆகிய 3 புதிய மெட்ரோ வழித்தடங்களுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யும்.

› சென்னை மாநகரின் அனைத்து நுகர்வோருக்கும் ஸ்மார்ட் மீட்டர்கள் வழங்கப்படும். மாநிலத்தில் பிற பகுதிகளில் 50 லட்சம் தொழில், வணிக நுகர்வோருக்கும் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்படும்.

› டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் நெல் சாகுபடியினை ஊக்குவிக்க குறுவைத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்த ரூ. 5.134 கோடி ஒதுக்கீடு.

› வேளாண் மற்றும் உழவர் நலத் துறைக்கு 14,984 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

› மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.6,000ல் இருந்து ரூ.7,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம், 193 லட்சம் பாரம்பரிய மீனவர் குடும்பங்கள் பயனடையும்.

தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு அமைப்பு (TN AI Mission) மூலம் சுகாதாரம், விவசாயம், கல்வி, குடிமக்கள் சேவைகள், நகர்ப்புர நிர்வாகம் மற்றும் சமூகநல நிர்வாகம் போன்ற துறைகளிலும் தேவையான இதர துறைகளிலும், செயற்கை நுண்ணறிவு சார்ந்த முன்முயற்சிகளில் தனித்த கவனம் செலுத்தும்

› கோயம்புத்தூர் அரியலூர் 765 கே.வி. மின் பகிர்மானப் பாதைத் திட்டம் ரூ.4,000 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

› அனைத்து இசேவை மையங்களும் 'இசேவை 2.0' ஆக மேம்படுத்தப்படும். அதிவேக இணையம் கூடுதல் மக்கள்நல சேவைகள். நம்ம அரசு WhatsApp Chatbot சேவைகள் 76இல் இருந்து 275 ஆக விரிவாக்கம் செய்யப்படும்.

› செயற்கை நுண்ணறிவு, தகவல் ழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறைக்கு 398 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

› 'வீட்டுக் கூரை சூரிய மின் மானியத் திட்டம்' அறிமுகம் செய்யப்படுகிறது. இதன் மூலம் சூரிய மின்பலகைக்கு ரூ.1 லட்சம் வரை மானியம் வழங்க ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› செயற்கை நுண்ணறிவு (கிமி) தொழில்நுட்பத்துடன் கூடிய இணையவழி திட்ட அனுமதி தளம் (Single Platform for Efficient Expedited Development - SPEED) அறிமுகப்படுத்தப்படும். விரைவான, வெளிப்படையான திட்ட அனுமதி வழங்க ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

› எரிசக்தித் துறைக்கு 15,828 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› 24,131 அடுக்குமாடிக் குடியிருப்புகள் இவ்வாண்டில் நிறைவு செய்யப்படும். 14,194 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுமானம் தொடங்கப்படும். அடிப்படை வசதிகளுடன் தரமான குடியிருப்புகள் வழங்க ரூ.1,253 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› 5,904 சதுர கி.மீ. பரப்பளவில் விரிவுபடுத்தப்பட்ட சென்னை பெருநகர பகுதிக்கான ஓர் விரிவான முழுமைத் திட்டம் செயல்படுத்தப்படும். சென்னை பெருநகரப் பகுதியில் விரைவான விரிவாக்கத்திற்கான ஒருங்கிணைந்த திட்டமிடல் மேற்கொள்ளப்படும். இதற்கான நீண்ட கால வளர்ச்சி மற்றும் மாற்றத்திற்கான ஓர் வரைபடம் உருவாக்க ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு 8,852 கோடி ரூபாய் ஒதுக்கீடு

› முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் கீழ், குடிநீர், சாலைகள், கழிவுநீர், போக்குவரத்து, பசுமை மின் ஆளுமை ஒரே திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும். 2031க்குள் உலகத் தர நகரங்களை உருவாக்கும் இலக்கை அடைய ரூ. 2,117 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைக்கு 1,678 கோடி ரூபாய் ஒதுக்கீடு

› சென்னை மின் பகிர்மான திறன் ரூ.1,390 கோடியில் வலுப்படுத்தப்படும். பசுமை எரிசக்தி வழித்தடம் 2 ,3ம் கட்டத் திட்டங்கள் விரைவுபடுத்தப்படும்.

விருதுநகர்கோயம்புத்தூர் 765 கே.வி. மின் பகிர்மானத் திட்டம், கோயம்புத்தூர் அரியலூர் 765 கே.வி. மின் பகிர்மானப் பாதைத் திட்டம் ரூ.6,884 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும்.

› 11,760 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைக் கையாளும் பசுமை எரிசக்தி வழித்தடம் கட்டம் 3 திட்டத்தை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

› ரூ. 1,543 கோடி முதலீட்டில் 178 புதிய துணை மின்நிலையங்கள் உருவாக்கப்படும். ரூ.2,000 கோடியில் 40,000 பழைய மின்மாற்றிகள் மாற்றம் செய்யப்படும்.

› 5 ஆண்டுகளில் 20,000 பொது ணிகூஷி சார்ஜிங் நிலையங்கள் அமைக்கப்படும். இதற்கு ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. குடியிருப்புகளில் ணிகூஷி சார்ஜிங் நிலையங்களுக்கு அரசு மானியம் வழங்கப்படும். இதற்காக ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின்' கீழ் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும், குழந்தையின் பிறப்பைக் கொண்டாடும் வகையிலும், தாய்மையின் இன்பத்தையும் முக்கியத்துவத்தையும் போற்றும் வகையிலும், தாய்மாமனின் அன்பளிப்பாக 1 கிராம் தங்க மோதிரம் இத்திட்டத்தை வழங்கப்படும். இதற்காக ரூ.560 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› மாநகர இளைஞர் மற்றும் குடும்ப வீட்டு வசதித் திட்டம் கீழ் விசீபிளிவிணி திட்டம் சென்னைப் பெருநகரத்தில் அறிமுகம் செய்யப்படும். PPP (Public-Private Partnership) முறையில் ரூ.15,000 கோடி முதலீடு செய்யப்படுகிறது.

இதன்மூலம் அடுத்த 7 ஆண்டுகளில் 1 லட்சம் வீடுகள் குறைந்த வருமானக் குடும்பங்கள் மற்றும் இளைஞர்களுக்கு பாதுகாப்பான, தரமான குடியிருப்புகள் ஏற்படுத்தித் தரப்படும்.

திருநர் நலன்: மாற்று பாலினத்தவருக்காக திறன் பயிற்சி , சுயதொழிலுக்கு மானியத்துடன் கடன் உதவி வழங்கப்படும். 5 மாவட்டங்களில் 'அரண்' தங்குமிடங்கள் அமைக்கப்படும். ரூ.50,000 வரை சுயதொழில் வங்கிக் கடனுக்கு மானியம் வழங்கப்படும். 15 மாவட்டங்களில் குறுகிய கால தங்குமிட வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

மூத்த குடிமக்கள் பொழுதுபோக்கு மையங்கள்

நூலகம், யோகா, தியானம் , உள்ளரங்க விளையாட்டு வசதிகள் முதற்கட்டமாக 5 மாவட்டங்களில் நிறுவப்படும்

அங்கன்வாடி மேம்பாடு: 500 சிதிலமடைந்த அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டப்படும். குழந்தைகளின் பாதுகாப்பும் ஆரோக்கியமும் உறுதி செய்யும் முயற்சிகள் எடுக்கப்படும். பாதுகாப்பான குடிநீர், கழிப்பறை, மின்சார வசதிகள் உறுதி செய்யப்படும்.

› 69% இடஒதுக்கீட்டை பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

› 7.5% இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவக் கல்விக் கட்டண உதவி வழங்கப்படும்.

› மாணவிகளின் கல்வி இடைநிற்றலைத் தடுக்க ஊக்கத்தொகை வழங்கப்படும். மொத்தமாக ரூ.462.41 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› சிறுபான்மையின மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை தொடரும்.

› ஹஜ் பயண மானியம் ரூ.25,000ல் இருந்து ரூ.35,000 ஆக உயர்வு.

› கிறிஸ்தவ, முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களுக்கு ரூ.1.05 கோடி ஒதுக்கீடு.

› கபர்ஸ்தான்கள் மற்றும் கல்லறைத் தோட்ட மேம்பாட்டிற்கு ரூ.34 கோடி ஒதுக்கீடு.

› 12 மாவட்டங்களில் 12 முதியோர் இல்லங்கள் நிறுவப்படும். இதற்காக ரூ.6.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கு 1,485 கோடி ரூபாய் ஒதுக்கீடு

அண்ணனின் சீர்: பெண்களின் திருமண நன்னாளில் 8 கிராம் தங்க நாணயம், ஒரு பட்டுப் புடவை வழங்கப்படும். இதற்காக ரூ.812 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› பெருந்தலைவர் காமராசர் காலை உணவுத் திட்டம் 68ஆம் வகுப்பு மாணவர்களுக்கு திட்டம் விரிவாக்கம் செய்யப்படுகிறது. 15,414 பள்ளிகளில் பயிலும் 15.14 லட்சம் மாணவர்கள் பயன்பெறுவர். ரூ. 710 கோடி நிதி ஒதுக்கீடு

› சமூகநீதித் துறைக்கு 3,937 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› ஆன்றோர் மேம்பாட்டுத் திட்டம்: பழங்குடியினர் குடியிருப்புகளில் வீடுகள், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள், வாழ்வாதாரத் திட்டங்கள், சுகாதாரக் கட்டமைப்புகள், கல்வி நலன் சார்ந்த உதவித்தொகைத் திட்டங்கள், பள்ளி மற்றும் விடுதி மேம்பாடு உள்ளிட்ட அடிப்படை வசதி மேம்படுத்தப்பட ரூ.250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› அயோத்திதாசப் பண்டிதர் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் கீழ் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியுடன் வாழ்க்கைத் தரம் உயர்வை உறுதி செய்ய ரூ. 300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயத் தொழிலாளர்களை நில உரிமையாளர்களாக மாற்றும் நோக்குடன், பெண்களுக்கு முன்னுரிமை வழங்க மண்ணின் மகள் திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் முத்திரைத்தாள் வரி மற்றும் பதிவுக் கட்டணத்தில் முழு விலக்கு அளிக்கப்படும். விவசாயம் செய்திட நவீன தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படும். இதற்காக ரூ. 5.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› 'ஊரகப் பகுதிகளில் பெண்களுக்காக 'வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்பு' திட்டத்தின் கீழ் 100% மானியத்தில் 5 வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கப்படும்'

அண்ணல் அம்பேத்கர் தொழில்

முன்னோடிகள் திட்டம் செயல்படுத்த ரூ.165 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். இது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் தொழில் முன்னவுத் திறனை ஊக்குவிக்கும் திட்டம்.

இதன்மூலம் மூலதண மானியம் மற்றும் கடன் வழங்கி தொழில் தொடங்க ஆதரவு அளிக்கப்படும். பொருளாதார முன்னேற்றம் மற்றும் தன்னிறைவு நோக்கில் செயல்படுத்தப்படுகிறது.

› ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்தவும், நிலையான வளர்ச்சியை உறுதிசெய்யவும் ‘வெற்றி தொழில் முனைவோர் திட்டம்’ செயல்படுத்த தமிழ்நாடு 2026 27 பட்ஜெட்டில் ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைக்கு 2,022 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைக்கு ரூ.17,150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› மாநிலம் முழுவதும் 10 ஒலிம்பிக் சிறப்பு மையங்கள் அமைக்கப்பட ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› தமிழரின் பாரம்பரிய விளையாட்டுகளை உலக அரங்கிற்கு கொண்டு செல்ல தமிழ்நாடு கிராமிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும். இதற்காக ரூ.42 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

› விளையாட்டில் ஆர்வமும் திறமையும் கொண்ட 8 முதல் 18 வயதுக்கு உட்பட்ட இளம் பள்ளி மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்க்கு உலகத்தரம் வாய்ந்த பயிற்சிகள் வழங்க ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு ரூ.1051 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› அண்ணல் அம்பேத்கர் அயல்நாட்டுக் கல்வி உதவித் தொகைத் திட்டம், நடப்பாண்டில் 352 மாணவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும். முன்னெப்போதும் இல்லாத வகையில் ரூ.131 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.44,527 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› 10,000 அரசுப் பள்ளிகளில் ‘சூப்பர் க்ளீன், சூப்பர் கேம்பஸ்’ திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக ரூ.139 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› பெருந்தலைவர் காமராஜர் சிறப்புப் பள்ளிகள் அமைக்க ரூ.125 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› 5000 அரசுகப் பள்ளிகளிலிருந்து கூடுதலாக 2,600 பள்ளிகளுக்கு ஜிழி ஷிறிகிஸிரி விரிவுபடுத்தப்படும்.

› பாடத்திட்டை மறுசீரமைப்பு செய்ய ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› ‘போதையில்லா தமிழ்நாடு’ திட்டத்துக்கு ரூ.7 கோடி ஒதுக்கீடு. பள்ளிகளில் போதைப் பொருள் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

› 11ம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு ஹெல்மெட், குடிநீர் பாட்டில் வைக்கும் வசதிகள் கொண்ட சைக்கிள் வழங்கப்படும். இதற்காக ரூ.277 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› பள்ளி பாடத்திட்டம் மறுசீரமைப்புக்கு ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› பொது நூலகங்களை டிஜிட்டல் நூலகங்களாக மாற்ற ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› உயர் கல்வித் துறைக்கு ரூ.8393 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› கல்லூரி மாணவர்களுக்கு ரூ.2000 கோடியில் ‘வெற்றி மடிக்கணினி திட்டம்’ செயல்படுத்தப்படும்.

› போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சியளிக்க கூடுதலாக ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

› ரூ.90 கோடி மதிப்பீட்டில் 5 புதிய தொழில்பயிற்சி நிறுவனங்கள் அமைக்கப்படும்.

› 2031ம் ஆண்டுக்குள் பொறியியல கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் 5 லட்சம் இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவு திறன் பயிற்சி அளிக்கப்படும்.

உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை நிதியமைச்சர் மரிய வில்சன் வெளியிட்டார்.

# தமிழக பட்ஜெட் மு.க. ஸ்டாலின் கருத்து...!



முதலமைச்சர் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட்டை நிதியமைச்சர் மரிய வில்சன் தாக்கல் செய்தார் இந்த பட்ஜெட் குறித்து முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பக்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

சட்டமன்றத்தில் வாசிக்கப்பட்ட தமிழக பட்ஜெட் பற்றி ஸிமீமீறீ சிவிக்குப் புரியும் மொழியில் சொல்ல வேண்டுமென்றால்,

'Blast Blast'-ஆக இருக்கும் என எதிர்பார்த்த மக்களுக்கு, ‘Waste Waste' எனச் சொல்லும்படிதான் இருக்கு!

அதுமட்டுமல்ல, இது திராவிட மாடல் அரசின் திட்டங்களின் Remake Version budget!மக்கள் மொழியில் சொல்ல வேண்டுமென்றால், விவசாயிகள் பிரச்சினை, மின் கட்டணக் குளறுபடி பிரச்சினை, விலைவாசி உயர்வுப் பிரச்சினை என எதைப் பற்றியும் கவலையின்றி, மாநிலத்திற்குத் தேவையான புதிய தொலைநோக்குத் திட்டங்களையும் அறிவிக்காத பட்ஜெட்!

அதுமட்டுமல்ல,

ரூ.2,500 மகளிர் உரிமைத் தொகை,

வேலையில்லா இளைஞர்களுக்கு ரூ. 4 ஆயிரம்,

ஆண்டுக்கு 6 இலவச சிலிண்டர்,

முழுப் பயிர்க்கடன் தள்ளுபடி, என முக்கிய வாக்குறுதிகள் எதைப் பற்றியும் மூச்சே விடாத பட்ஜெட் !மொத்தத்தில்,

சொந்தமாகவும் யோசிக்காத

சொன்னதையும் செய்யாத

சுரத்தில்லாத புஸ்வாண பட்ஜெட்டாகத்தான் ‘ரீல் அரசின்’ முதல் பட்ஜெட் அமைந்திருக்கிறது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழக பட்ஜெடுக்கு '0' மார்க்

தமிழக பட்ஜெட் குறித்து சட்டசபை வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கூறுகையில்,"த.வெ.க. அரசுக்கும் இன்று வெளியான பட்ஜெட்டிற்கும் மிகப்பெரிய பூஜ்ஜியம் மார்க். தவெக வாக்குறுதிகளை எப்போது நிறைவேற்றுவார்கள் என தகவல் இல்லை.

மாற்றம் மாற்றம் என கூறும் தவெக அரசு திராவிட மாடல் கொண்டு வந்த திட்டங்களுக்கு பெயர் மாற்றம் செய்துள்ளது. திமுக அரசின் திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டியுள்ளனர்.

திமுக கொண்டு வந்த திட்டத்திற்கு பெயரை மாற்றுவதற்கு எதற்காக அதிகாரிகளுடன் ஆலோசனை செய்தார்கள்?

தேர்தல் வாக்குறுதியில் சொன்ன எதுவுமே பட்ஜெட்டில் இடம்பெறவில்லை" என்றார்.

## தி.மு.க.வில் 110 மாவட்டங்கள்

1. கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவில் தொகுதிகளை கிழக்காகவும

2. குளச்சல் மற்றும் கிள்ளியூரை தெற்காகவும்

3. பத்மநாபபுரம் மற்றும் விளவங்கோடு தொகுதிகளை மேற்காகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

# பள்ளிக் கல்விக்கு அமைச்சர் ராஜ்மோகன் அதிரடி அறிவிப்பு



தமிழக சட்டப்பேரவையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ் மோகன் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் விளையாட்டு உடை, மருத்துவ பரிசோதனை, 2,771 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புதல் மற்றும் தமிழ்நாடு அறிவுப்பாடத்திட்டம் உள்ளிட்ட 31 புதிய முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

மகிழ்வுடன் முன்னேறு என்ற திட்டத்தின் கீழ் மாதத்தில் ஒருமுறை நோ பேக் டே கடைப்பிடிக்கப்படும். அப்போது புத்தகப்பை, புத்தகம் மாணவர்கள் கொண்டு வர வேண்டியது இல்லை. இதன் மூலமாக அவர்களின் புத்தகப்பை சுமை மட்டுமல்லாம மனச்சுமையும் குறையும் என அமைச்சர் ராஜ்மோகன் அறிவித்துள்ளார்.

கதைகளின் வாயிலாக பாடத்திட்டங்களை நடத்துவதற்கு வழிவகை செய்யப்படும். இனி பள்ளிகளில் விளையாட்டு நேரங்களில் பாடங்களை நடத்தக்கூடாது.

### அரசுப்பள்ளி மூடப்படாது

சத்துணவில் தற்போது எல்லா சத்துக்களும் உள்ளது. புரத சக்தியை அதிகரிக்க வேண்டும் எனவே கூறினோம். ஆசிரியர்கள் பிரச்சனை பேசி தீர்ப்பதற்கு உயர்நிலைக்குழு அமைக்கப்படும். கடந்த ஆண்டில் பள்ளிக் கல்வித்துறையில் செலவிட்டதை விடவும் இந்த ஆண்டில் அதிகமாக செலவழிக்கப்பட உள்ளது. தமிழ்நாட்டில் ஒரு அரசுப்பள்ளியும் மூடப்படாது.

### ஸ்போர்ட்ஸ் ஜெர்சி

பத்து மாணவர்கள் இருந்தாலும் அரசுப்பள்ளி இயங்கும் என தெரிவித்துள்ளார். மேலும் மாணவர்களுக்கு இலவச சீருடையுடன் சேர்த்து ஸ்போர்ட்ஸ் ஜெர்சி

## இலவச சிலிண்டர்

முன்னதாக முதல்வர் விஜய் அன்னப்பூரணி சூப்பர் சிக்ஸ் திட்டம் குறித்தான அறிவிப்பில் ஆண்டுக்கு மூன்று இலவச சிலிண்டர்கள் வழங்கப்படும் என அறிவித்தார். தேர்தல் அறிக்கையில் ஆறு இலவச சிலிண்டர்கள் என அறிவித்து விட்டு தற்போது மூன்றாக குறைத்தது ஏன் என்று பலரும் கேள்விகளை முன்வைத்து வருகின்றனர். அதோடு அனைத்து குடும்பத்திற்கு என அறிவித்து விட்டு, தற்போது வருமான வரம்பும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதையும் எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சனம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்களை14.08.2026 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் திரு.ஆர்.சி.பால் கனகராஜ், துணைத் தலைவர் திரு.எஸ்.சசிகுமார், செயலாளர் திரு.எஸ்.அறிவழகன், பொருளாளர் திரு.ஜி.ராஜேஷ், நூலகர் திரு.வி.எம். ரகு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் சந்தித்துப் பேசினார்கள்.**

வழங்கப்படும். பள்ளிக்கல்வித்துறையில் காலியாக உள்ள சி-டி பிரிவில் கருணை அடிப்படையில் 350க்கும் மேற்பட்ட வருக்கு பணி நியமனம் வழங்கப்படும்.

## அதிக கட்டணம் வசூலித்தால் நடவடிக்கை

தனியார் பள்ளிகள் அதிக கட்டணம் வசூல் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும். காலியாக உள்ள உடற்கல்வி ஆசிரியர் உள்ளிட்ட பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும் உள்ளிட்ட அறிவிப்புகளையும் அமைச்சர் ராஜ் மோகன் வெளியிட்டுள்ளார். மேலும் பள்ளிக்கல்வித்துறை சம்பந்தமாக உறுப்பினர்கள் எழுப்பிய அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளிப்பதற்கு தற்போது நேரமில்லை. எனவே எழுத்து வடிவில் அனைத்து கேள்விகளுக்கும் கட்டாயமாக பதில் அளிக்கப்படும் எனவும் உத்தரவாதம் அளித்திருக்கிறார்.

ஆசிரியர் காலிப் பணியிடங்கள்: அரசுப் பள்ளிகளில் உடனடியாக 2,771 ஆசிரியர் காலியிடங்கள் நிரப்பப்படும்.

பாடத்திட்டம்: அரசுப் பள்ளிகளில் 'தமிழ்நாடு அறிவுப்பாடத்திட்டம்' செயல்படுத்தப்படும்.

மாணவர் நலன்: மாணவர்களுக்கு விளையாட்டு உடை வழங்கப்படும்.

பல், கண் மற்றும் காது பரிசோதனை போன்ற மருத்துவ பரிசோதனைகள் செய்யப்படும்.

பள்ளிகளில் விளையாட்டு நேரத்தை (PE Period) ரத்து செய்யக்கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

திறன் மேம்பாடு: 2 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்காக ‘‘திறன் ப்ளஸ்’’ திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

இதர வசதிகள்: ஸ்மார்ட் நூலக அட்டை வழங்கப்படும் மற்றும் ஆசிரியர்களின் நீண்டகால சிக்கல்களைத் தீர்க்க உயர்மட்டக் குழுஅமைக்கப்படும்.

# ஏழை எளிய மக்களின் சேமிப்பு கணக்கிற்கு கட்டணம் விதிக்கும் மோடி அரசு

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அறிக்கை



வங்கித் துறையில் ஏழை எளிய மக்களுக்காக 2005 ஆம் ஆண்டு டாக்டர் மன்மோகன்சிங் ஆட்சியில் உருவாக்கப்பட்டது தான் அடிப்படை வங்கி கணக்கு. நோ பிரில்ஸ் அக்கவுண்ட் அதாவது அலங்காரம் இல்லாத வங்கி கணக்கு என்ற பெயரில் ஏழை மக்களுக்காகவே இந்த கணக்கு துவங்கப்பட்டது. பின்னாளில் இந்த கணக்கிற்கு பிரதான் மந்திரி ஜன்தன் யோஜனா என்று பாஜக அரசாங்கம் பெயரிட்டது. 56 கோடி அத்தகைய கணக்குகளில் 53 கோடி கணக்குகள் அரசு வங்கிகளால் திறக்கப்பட்டன. அத்தகைய கணக்குகளுக்கு அபராதம் விதிக்க வங்கிகள் முடிவெடுத்துள்ளன.

மாதம் நான்கு முறைக்கு மேல் வங்கிகளில் இருந்து நேரடியாகவோ அல்லது ஏடிஎம் மூலமாகவோ பணம் எடுக்கப்பட்டால், ஒவ்வொரு முறையும் 15 ரூபாய் அபராதம் விதிக்கப்படும்; இதற்கு ஜிஎஸ்டி 18 சதவீதம் வரி வசூலிக்கப்படும். ஆக ஒவ்வொரு முறையும் 17 ரூபாய் 70 பைசா அபராத கட்டணம் வசூலிக்கப்படும் என்று ஸ்டேட் வங்கி அறிவித்துள்ளது. இது அக்டோபர் மாதம் முதல் தேதி முதல் அமலுக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரிசர்வ் வங்கி அனுமதித்துள்ளதாக தெரிகிறது.

எனவே ஸ்டேட் வங்கியை தொடர்ந்து மற்ற வங்கிகளும் ஏழை மக்களுக்கு கட்டணம் வசூலிக்கும் என்று தெரிகிறது. ஒருபுறம் யுபிஐ பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் வசூலிக்க இந்த அரசு கடந்த பாராளுமன்ற தொடரில் சட்டத் திருத்தம் கொண்டு வந்துள்ளது. அதனால் பாதிக்கப்படும் ஏழை மக்கள் பண பரிவர்த்தனைக்கு மீண்டும் தள்ளப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது. எனவே அவ்வாறு வங்கிக் கணக்கில் இருந்து பணம் எடுக்கும் மக்களுக்கும் அபராதம் என்று விதித்து எல்லா வகையிலும் ஏழை மக்களை வதைக்கிறது இந்த அரசு.

2016 ஆம் ஆண்டு பண மதிப்பு இழப்பு நடவடிக்கைக்குப் பிறகு பெரும்பாலான மக்களை டிஜிட்டல் பரிவர்த்தனை நோக்கி இந்த அரசு தள்ளியது. இருப்பினும் 2017 ஜனவரி மாதம் இருந்த பணப்புழக்கமான 9 லட்சம் கோடியில் இருந்து இன்று 43 லட்சம் கோடி அளவிற்கு பணப்புழக்கம் உயர்ந்துள்ளது. அதாவது இன்றளவிலும் கணிசமான பகுதி மக்கள் இன்டர்நெட் வசதி இல்லாமல் மின்சார வசதி இல்லாமல் பனப்பழக்கத்தில் ஈடுபடுகிறார்கள் என்ற உண்மை நிலையை தான் இது பிரதிபலிக்கிறது. இந்த மக்களை கட்டணம் என்ற பெயரில் தண்டிக்க மோடி அரசு முயற்சிக்கிறது.

ஏழை எளிய மக்களிடம் கட்டண கொள்ளை அடிக்கும் இந்த வங்கிகள் தான் கடந்த 10 ஆண்டுகளில் பெரு முதலாளிகளுக்கு 16 லட்சம் கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்துள்ளது. எனவே, மோடி அரசின் ஏழை மக்கள் மீதான இந்த கட்டண கொள்ளை வன்மையாக கண்டிக்கிறோம். உடனடியாக இந்த கட்டண உயர்வை கைவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

# நக்கீரன் கோபால் மீது வழக்கு பதிவு பத்திரிகையாளர் மன்றம் கண்டனம்



மூத்த பத்திரிகையாளரும், நக்கீரன் இதழின் ஆசிரியருமான நக்கீரன் கோபால் அவர்கள் மீது சென்னை சைபர் குற்றப்பிரிவு காவல்துறையினர் பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தல், பொது மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்துதல் மற்றும் பகைமையைத் தூண்டுதல் (BNS 352, 353(1)(b), 196) ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இவற்றில் இரண்டு பிரிவுகள் பிணையில் வெளிவராத குற்றப்பிரிவுகளாகும். ஒரு யூடியூப் நேர்காணலில் முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் குறித்து அவர் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 40 ஆண்டுகளாக அச்சமின்றி அதிகார மையங்களின் தவறுகளை அம்பலப்படுத்தி, உண்மையை உரக்கச் சொன்ன துணிச்சலான பத்திரிகையாளராக திரு.நக்கீரன் கோபால் அவர்கள் அறியப்படுகிறார். அதிகாரத்தில் யார் இருந்தாலும் தயக்கமின்றி கேள்வி எழுப்புவது, உண்மைகளைத் தேடி வெளிக்கொணர்வது ஆகியவை அவரது பத்திரிகைப் பணியின் அடையாளங்களாகும்.

அத்தகைய மூத்த பத்திரிகையாளர் மீது அவர் தெரிவித்த கருத்துக்களுக்காக வழக்கு பதிவு செய்திருப்பது நக்கீரன் கோபால் என்ற பத்திரிகையாளர் மீதான நடவடிக்கை மட்டுமல்ல, ஒட்டுமொத்த ஊடக உலகிற்கே விடுக்கப்படும் அச்சுறுத்தலாகும்.

அண்மைக் காலமாக, தமிழக வெற்றிக் கழக அரசை விமர்சித்ததற்காகவே பலர் மீது குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்படுவதும் கைது செய்யப்படுவதும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. கருத்து வேறுபாடுகளை ஜனநாயக ரீதியாக எதிர்கொள்வதற்குப் பதிலாக, காவல்துறை மற்றும் குற்றவியல் சட்டங்களைப் பயன்படுத்தும் இந்தப் போக்கு, ஒரு ஜனநாயக அரசுக்கு அழகல்ல. இது அரசியல் சாசனம் வழங்கியுள்ள கருத்துரிமையை நசுக்குவதுடன், அச்சுறுத்தல் மூலம் விமர்சனக் குரல்களை மௌனப்படுத்தும் முயற்சியாகும்.

ஒரு பத்திரிகையாளரின் கருத்துக்கு எதிராக மாற்றுக் கருத்தை முன்வைப்பதற்கு பதிலாக குற்றவியல் வழக்குகளைப் பதிவு செய்வது ஊடகச் சுதந்திரத்தின் அடிப்படை நோக்கத்தையே கேள்விக்குள்ளாக்கும் செயலாகும். ஜனநாயகத்தின் வலிமை என்பது விமர்சனங்களை எதிர்கொண்டு பதிலளிப்பதில்தான் உள்ளது என்பதை தவெக அரசு உணர வேண்டும்.

எனவே, மூத்த பத்திரிகையாளர் திரு.நக்கீரன் கோபால் அவர்கள் மீது பதிவு செய்யப்பட்டுள்ள இந்த வழக்கை உடனடியாக திரும்பப் பெறுமாறு காவல்துறைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் உடனடியாக உத்தரவிட வேண்டுமென்று சென்னை பத்திரிகையாளர் மன்றம் வலியுறுத்துகிறது.

அதேபோல், பத்திரிகையாளர்கள் அச்சமின்றி கடமையைச் செய்யக்கூடிய சூழலை உறுதி செய்யவும், அரசை விமர்சிப்பதை குற்றமாக்கும் போக்கை முற்றிலுமாக கைவிட வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்களை சென்னை பத்திரிகையாளர் மன்றம் வலியுறுத்துகிறது.



# ஆதாரம் இருந்தால் நடவடிக்கை எடுங்கள்; உருட்டல், மிரட்டல்களுக்கு தி.மு.க. பயப்படாது; உதயநிதி ஸ்டாலின் ஆவேசம்

சட்டசபையில் நடந்த விவாதத்தின்போது எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

சபாநாயகர் இந்த அவையை மிகவும் சிறப்பாக வழிநடத்தி கொண்டு செல்கிறீர்கள். எங்களுக்கும் வாய்ப்பு தந்தாலும் எங்களைவிட ஆளும் கட்சியினருக்கு அதிக வாய்ப்பு கொடுக்கிறீர்கள்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள், அமைச்சர் கள் ஆதாரம் இல்லாமல் குற்றச் சாட்டுகளை முன்வைக்கிறார்கள். நீங்களும் அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கு கிறீர்கள். எதிர்கட்சிகளை விட ஆளும்கட்சி உறுப்பி னர்கள் பேசுவதை அதிக மாக நீங்கள்தான் அவைக் குறிப்பில் இருந்து நீக்கி வரலாறு படைத்திருக்கிறீர்கள். அதற்கு என் வாழ்த்துகள்.

சட்டப்பேரவை நேரலை செய்யப்படுகிறது. நாங்கள் கேள்வி கேட்டால் ஆச்சரியப் படும் அளவுக்கு பதில் தருகிறார்கள். இப்போது பாட்டு எல்லாம் பாடுகிறார்கள். நாங்கள் சட்டப்பேரவைக்கு வந்திருக்கிறோமா? என்று சந்தேகம் வருகிறது. நீங்கள் இதையெல்லாம் அவைக் குறிப்பில் இருந்து நீக்கினாலும் ரீல்ஸ் மூலமாக சமூக வலைத்தளங்களில் அதிகமாக பகிரப்படுகிறது.

நீங்கள் அதை நீக்குவதே அர்த்தமில்லாமல் போய்விடு கிறது. தனது மேஜையில் பைல் இருப்பதாகவும், திறந்து பார்க்க வைத்து விடாதீர்கள் என்று முதல் அமைச்சர் பேசி உள்ளார். தயவு செய்து அவர் திறந்து பார்க்க வேண்டும், நட வடிக்கை எடுக்க வேண்டும். எதற்காக பயப்படுகிறீர்கள்? காலம் தாழ்த்துகிறீர்கள் நல்ல நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா?. பைல் மீது நடவடிக்கை எடுங்கள் இந்த உருட்டல் மிரட்டல்களுக்கெல்லாம் பயப்பட மாட்டோம். இவ்வாறு அவர் பேசினார்.

இதற்கு பதிலளித்து அமைச்சர் ஆதவ் அர்ஜூனா பேசியதாவது:

மிசாவைப் பார்த்த தனிப்பெரும் இயக்கமான தி.மு.க.வை தோற்கடித்து வெற்றி பெற்றிருக்கிறோம். அனைத்துத் துறைகளிலும் வெள்ளை அறிக்கை வெளி யிடப்படும். தவறுகள் மீது ஆதாரத்துடன் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுதான் முதல்அமைச்சர் அன்று சொல்ல வந்தது.

நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் யார் பெயரைக் கூறி பதவி ஏற்றுக் கொண்டார்கள்? 2021 தேர்தல் அறிக்கையில் சட்டப்பேரவை நேரலை செய்யப்படும் என்று சொன்னீர்களே ஏன் செய்ய வில்லை?. நேரலை செய்து வெளிப்படையாக நடத்தக் கூடிய தைரியம் தி.மு.க.வுக்கு இதுவரை இருந்ததில்லை. தமிழ்நாட்டின் வரலாற்றி லேயே முதல்முறையாக ஜனநாயகத்தை காக்க நேரலை செய்து வருகிறோம்" என்றார்.



# கிருஷ்ணசாமிக்கு தகைசால் தமிழர் விருது

சென்னை கோட்டை கொத்தளத்தில் தேசியக்கொடி ஏற்றி மரியாதை செலுத்திய முதல்வர் விஜய், காங்கிரஸ் மூத்த தலைவர் கிருஷ்ணசாமிக்கு தகைசால் தமிழர் விருது வழங்கி கவுரவித்தார். மேலும் ரூ.10 லட்சத்திற்கான காசோலையையும், பரிசினையும் விஜய் வழங்கினார்.

முதல்வர் விஜய் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் தேசியக்கொடி ஏற்றி வைத்த பிறகு, காவல்துறை பதக்கங்கள் மற்றும் பல்வேறு பிரிவுகளில் விருதுகளையும் வழங்கினார். அதன் விவரம் வருமாறு:

## தகைசால் தமிழர் விருது

தமிழ்நாடு அரசால் கடந்த 2021ம் ஆண்டு உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டு வரும் தகைசால் தமிழர் விருது காங்கிரஸ் மூத்த தலைவர் கிருஷ்ணசாமிக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர் அன்புமணி மனைவியும் எம்.எல்.ஏவுமான சவுமியா அன்புமணியின் தந்தை ஆவார்.

தகைசால் தமிழர் விருதை பெறும் நபருக்கு ரூ.10 லட்சம் பரிசாக வழங்கப்படுகிறது. கடந்த 2021 ஆம் ஆண்டு பொதுவுடைமை இயக்க மூத்த தலைவர் என்.சங்கரய்யாவுக்கும், 2022ஆம் ஆண்டு கம்யூனிஸ்டு கட்சி மூத்த தலைவர் நல்லகண்ணு, 2023 ஆம் ஆண்டு திராவிடர் கழக தலைவர் கி. வீரமணி, 2024 ஆம் ஆண்டு காங்கிரஸ் மூத்த தலைவர் குமரி அனந்தன், 2025 ஆம் ஆண்டு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கே.எம். காதர் மொயதீன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

## கல்பனா சாவ்லா விருது

வீரசாகசம் புரிந்தவர்களுக்கு கல்பனா சாவ்லா விருது கோவையை சேர்ந்த நவ்ஷீன் பானு சந்த் என்ற பெண்ணுக்கு இந்த ஆண்டு வழங்கப்பட்டது. இவர் உலகிலேயே உயரமான எவரெஸ்ட் சிகரத்தை 2 முறை தொட்டவர். டென்சிங் ஹிலாரி எவரெஸ்ட் மாரத்தான் என்ற உலகிலேயே கடினமான மலையேற்றத்தை அவர் ஏறியுள்ளார்.

## சிறந்த மாநகராட்சி:

முதல் பரிசு  கோவை
இரண்டாம் பரிசு  தஞ்சை
சிறந்த நகராட்சி:
முதல் இடம்  போடிநாயக்கனூர்
2வது இடம்  ஆரணி
3வது இடம்  விழுப்புரம்
சிறந்த பேரூராட்சி
முதல் பரிசு - திருவிடைமருதூர் (தஞ்சை மாவட்டம்)
2வது இடம்  கருங்கல் (குமரி மாவட்டம்

டாக்டர் வி.மோகனுக்கு அப்துல் கலாம் விருது வழங்கப்பட்டது. டாக்டர் வி. மோகனின் மகள் விருதை பெற்றுக்கொண்டார்.

# தமிழ்நாடு காங்கிரஸ் சிறப்பு பொதுக்குழுவில் மத்திய அரசுக்கு எதிராக தீர்மானங்கள்!



தமிழ்நாடு காங்கிரஸ் சிறப்பு பொதுக்குழு கூட்டம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. ப. மாணிக்கம் தாகூர், எம்.பி. அவர்கள் தலைமையில் சென்னை தேனாம்பேட்டை காமராஜர் அரங்கில் 20.08.2026 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்ற போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

**1. அரசியல் தீர்மானம்**

2014 மக்களவைத் தேர்தல் பரப்புரையின் போது நரேந்திர மோடி, வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ள ரூபாய் 85 லட்சம் கோடி கறுப்புப் பணத்தை மீட்டு, ஒவ்வொரு இந்தியரின் வங்கிக் கணக்கிலும் ரூபாய் 15 லட்சம் செலுத்துவோம், ஆண்டுக்கு 2 கோடிப் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்குவோம், விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்காகக் கூட்டுவோம், அனைத்துப் பொருட்களையும் இந்தியாவிலேயே தயாரிப்போம், ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் அளிப்போம், விலைவாசியைக் குறைப்போம், எல்லோருக்கும் கழிப்பறை, எல்லோருக்கும் வீடு, எல்லோருக்கும் மின்சாரம், எல்லோருக்கும் சமையல் எரிவாயு இணைப்பு, நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு அளிக்கும் சட்டத்தை நிறைவேற்றுவோம், நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதத்தை இரட்டை இலக்கில் நிலைநிறுத்துவோம், 2024 ஆம் ஆண்டிற்குள் இந்தியப் பொருளாதாரத்தை 5 டிரில்லியன் கோடி டாலராக உயர்த்துவோம், அனைத்து மாநில முதல்வர்களையும் பிரதமருக்கு இணையாக மதிப்போம், இட ஒதுக்கீட்டை உறுதி செய்து சமூகநீதியைக் காப்போம், அனைத்து மாநில மொழிகளுக்கும் சமமான முக்கியத்துவம் அளிப்போம் என்ற பல வாக்குறுதிகளை வழங்கினார். தேர்தலில் வெற்றி பெற்று பா.ஜ.க. ஆட்சியில் அமர்ந்து, நரேந்திர மோடி பிரதமராகப் பொறுப்பேற்று 12 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ஆனால், கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. கொடுத்த வாக்குறுதிகளை ஏன் நிறைவேற்றவில்லை என்று பா.ஜ.க.வை கேட்க வேண்டிய இடத்தில் காங்கிரஸ் கட்சி இருக்கிறது.

**வரலாறு காணாத சமத்துவமின்மை**

நரேந்திர மோடி ஆட்சியில் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் ஏழை,எளியவர்களின் நலனைப் புறக்கணித்து சில தொழிலதிபர்கள் பயனடைவதற்கே உதவியிருக்கின்றன. இதை அம்பலப்படுத்துகின்ற வகையில் பல அறிக்கைகள் வெளிவந்துள்ள. 2026ஆம் ஆண்டின் உலக சமத்துவமின்மை அறிக்கை யின்படி, நாட்டின் ஒட்டுமொத்த வருமானத்தில் 58 சதவிகிதத்தை மேல்மட்டத்தில் உள்ள 10 சதவிகிதத்தினர் பெற்று வருகின்றனர். கீழ்மட்டத்தில் உள்ள 50 சதவிகித மக்களுக்கு வெறும் 15 சதவிகிதம் மட்டுமே கிடைக்கிறது. மேல்மட்டத்திலுள்ள 10 சதவிகித கார்ப்பரேட்டுகள் நாட்டின் 65 சதவிகித சொத்துகளை மோடி ஆட்சியில் குவித்துள்ளனர். இதில் உயர்மட்டத்தில் உள்ள ஒரு சதவிகித நபர்கள் மட்டும் 40 சதவிகித சொத்துகளைத் தன்வசப்படுத்தியுள்ளனர். இந்தியாவில் தற்போதைய வருமான சமத்துவமின்மை பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தை விட மோசமான நிலையில் உள்ளது. மேல்மட்டத்தில் உள்ள 10 சதவிகிதத்தினரின் வருமானத்திற்கும், கீழ்மட்டத்தில் உள்ள 50 சதவிகித்தினரின்

வருமானத்திற்குமான இடைவெளி கடந்த 2014 முதல் 2024 வரை நிலையாக இருக்கிறது. இந்த வரலாறு காணாத சமத்துவமின்மை நரேந்திர மோடியின் ஆட்சி கார்ப்பரேட்டுகளின் காவலன் என்பதை உறுதி செய்கிறது. இந்த சொத்துக் குவிப்பை நம்பத்தகுந்த சர்வதேச ஆய்வு நிறுவனமான ஆக்ஸ்பார்ம் அறிக்கை உறுதி செய்திருக்கிறது.

**தொகுதி மறுவரையறை**

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடைபெறுகிறபோதெல்லாம் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்பது தென் மாநில மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்குத்தான் பயன்படும். 1971 ஆம் ஆண்டின் மக்கள் தொகை அடிப்படையில் 543 மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையே இன்னும் 25 ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டுமென்று அன்னை இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது, 1976 இல் அரசமைப்புச் சட்ட திருத்தத்தின் மூலம் தடுத்து நிறுத்தினார். 2002 ஆம் ஆண்டில் பிரதமர் வாஜ்பாய் இதே நிலையை 2026 வரை நீட்டிக்கிற வகையில் மீண்டும் திருத்தம் கொண்டு வந்து மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 543 என்று தொடர உறுதி செய்தார்.

ஆனால், 2011 மக்கள் தொகை எண்ணிக்கை அடிப்படையில் மக்களவைத் தொகுதிகளை உயர்த்த வேண்டுமென்று பா.ஜ.க. முயற்சி செய்வது, குடும்பக் கட்டுப்பாட்டின் மூலம் மக்கள் பெருக்கத்தைக் குறைத்த தென் மாநில மக்களை தண்டிக்கின்ற செயலாகும். எனவே, 1971 மக்கள் தொகை அடிப்படையில் இறுதி செய்யப்பட்ட 543 மக்களவைத் தொகுதிகளையும், அதில் மகளிருக்கான இடஒதுக்கீடு 33 சதவிகிதத்தையும் வழங்க வேண்டும் என்பதுதான் காங்கிரஸ் கட்சியின் கொள்கையாகும். இதன்மூலம் அனைத்து மாநில மக்களையும் உள்ளடக்கி வேற்றுமையில் ஒற்றுமை காண்கிற கூட்டாட்சி முறையை உறுதி செய்ய முடியும் என்று இப்பொதுக்குழுக் கூட்டம் உறுதியாக நம்புகிறது.

**விவசாயிகளின் விரோத அரசு**

விவசாயிகளின் விளை பொருட்களுக்கு டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் குழுவின் பரிந்துரையின்படி குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்குவோம் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. இதற்கு மாறாக, குறைந்தபட்ச ஆதரவு விலையைப் பறிக்கின்ற வகையில் 3 வேளாண் சட்டங்களை பா.ஜ.க. அரசு கொண்டு வந்தது. இதை எதிர்த்து தலைநகர் தில்லியில் கடும் குளிர், வெயிலைப் பொருட்படுத்தாமல் விவசாயிகள் போராடி அந்த வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற வைக்கிற நிலையை ஏற்படுத்தினார்கள். பா.ஜ.க.வின் ஒரே நாடு, ஒரே சந்தையை விவசாயிகள் ஏற்கத் தயாராக இல்லை. அதற்கு மாறாக, குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டப் பாதுகாப்பு என்ற கோரிக்கையை முன்வைத்தனர். ஆனால், அந்த கோரிக்கையை ஒன்றிய பா.ஜ.க. அரசு இதுவரை நிறைவேற்ற முன்வரவில்லை. விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி செய்வதால் அவர்களுக்கு எந்தப் பயனும் ஏற்படாது என்று கூறுகிற ஒருவரை பிரதமராகப் பெற்றிருப்பதற்கு விவசாயிகள் வெட்கித் தலைகுனிய வேண்டும். நரேந்திர மோடியைப் போன்ற விவசாய விரோத எண்ணம் கொண்ட, கார்ப்பரேட் ஆதரவு பிரதமரை இந்தியா இதுவரை கண்டதில்லை.

**கறுப்புப் பணம் ஒழிப்பு**

தேர்தல் பரப்புரையில் கொடுத்த கறுப்புப் பணம் ஒழிப்பு குறித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. இதற்கு மாறாக, பொருளாதாரப் பேரழிவுக்கு மிக முக்கியக் காரணமாக அமைந்த பண மதிப்பிழப்பு நடவடிக்கையை மோடி மேற்கொண்டார். ஆனால், செல்லாது என்று அறிவிக்கப்பட்ட ரூபாய் நோட்டுகளின் மொத்தத் தொகையில் 99 சதவிகிதம் வங்கிகளுக்குத் திரும்ப வந்து விட்டது. இதனால் கறுப்புப் பணம் ஒழியவில்லை. எனவே, கறுப்புப் பணத்தை கார்ப்பரேட்டுகள் வெள்ளைப் பணமாக மாற்றிக் கொள்வதற்குத்தான் நரேந்திர மோடியின் பண மதிப்பிழப்பு நடவடிக்கை உதவியது. ஆயிரக்கணக்கான சிறு, குறு தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் 35 லட்சம் பேர் வேலையிழந்தனர். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ரூபாய் 2.25 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டது. இது நரேந்திர மோடியால் நாட்டுக்கு ஏற்பட்ட பேரழிவுகளில் ஒன்றாகும்.

**தேர்தல் பத்திர நன்கொடை குவிப்பு**

கார்ப்பரேட்டுகளுக்கு பல்வேறு சலுகைகளை செய்ததற்காக பாரதிய ஜனதா கட்சிக்கு தேர்தல் பத்திர நன்கொடை குவிந்துள்ளது. இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில், தேர்தல் பத்திர நன்கொடை மூலமாக அரசியல் கட்சிகள் நிதி பெறுவது சட்டவிரோதம் என்று கடந்த பிப்ரவரி 2024 இல் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆனால், இந்தத் தீர்ப்பு வருவதற்கு முன்பாக 2018 முதல் 2024 வரை கார்ப்பரேட்டுகள் வழங்கிய மொத்த நன்கொடை ரூபாய் 16,518 கோடி. இதில் பா.ஜ.க. பெற்றது மட்டும் ரூபாய் 8252 கோடி. இது மொத்த நன்கொடையில் 50 சதவிகிதமாகும். இது ஊழல் இல்லை என்றால் வேறு எது ஊழல் என்பதை பா.ஜ.க. விளக்க வேண்டும்.

**காவிரி மேகதாது**

நீண்டகாலமாக நிலவி வந்த காவிரி பிரச்சினைக்கு முடிவு கட்டுகின்ற வகையில் 2007 இல் வெளிவந்த நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பு, 2018 இல் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி காவிரி நீர் பகிர்வு நடைபெற வேண்டும். ஆனால், இவற்றை மீறுகின்ற வகையில் காவிரி நீரை வழங்க கர்நாடக அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது.

தமிழகம் பெற்ற உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, காவிரிப் படுகை மாநிலங்களை பாதிக்கின்ற வகையில் எந்தவிதமான கட்டுமானப் பணிகளையும் கர்நாடக அரசு மேற்கொள்ளக் கூடாது என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், காவிரி நீரின் அளவை நிர்ணயிக்கும் தமிழ்நாடு எல்லையில் அமைந்துள்ள பிலிண்குடுலுவிற்கு 4 கி.மீ. தூரத்திற்கு மேலே கிருஷ்ணராஜசாகர் அணைக்கு கீழே கட்டுப்படுத்தப்படாத மழை நீரின் மூலம் தமிழகத்திற்கு மட்டுமே கிடைக்கக் கூடிய 80 டி.எம்.சி. நீரை அபகரிக்கும் நோக்கத்துடன் ரூபாய் 9000 கோடி செலவில் 67.15 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட அணையை மேகதாதுவில் கட்ட கர்நாடக அரசு முயற்சி செய்வதை தமிழ்நாடு எந்த நிலையிலும் ஏற்றுக் கொள்ளாது. மேகதாதுவில் அணை கட்டப்படுமேயானால், காவிரிப் படுகை வறண்ட பாலைவனமாக மாற வழிகோலும் என தமிழகமே ஒட்டுமொத்த எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறது.

இந்நிலையில் மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்ட விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்க ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சகம் அனுமதியளித்தது. இது பா.ஜ.க. அரசின் தமிழக விரோதப் போக்கை உறுதிப்படுத்துகிறது. கர்நாடகத்தில் யார் ஆட்சி செய்தாலும் அவர்கள் எல்லோருமே தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராகவே தான் கடந்த காலங்களில் செயல்பட்டிருக்கிறார்கள். காவிரி நீரின் உரிமையை நிலைநாட்டவும், மேகதாதுவில் அணை கட்டுவதை தடுக்கவும் தமிழக அரசு எடுக்கின்ற அனைத்து முயற்சிகளுக்கும் துணை நிற்போம் என்று இப்பொதுக்குழு உறுதி கூறுகிறது.

மாநில உரிமைகள் பறிப்பு

அனைத்து மொழிகளையும் சமமாகக் கருத வேண்டிய ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் புதிய கல்விக் கொள்கையின் மூலம் மும்மொழித் திட்டம் திணிக்கப்பட்டது. இதை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதால் சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய ரூபாய் 2952 கோடியை விடுவிக்க ஒன்றிய பா.ஜ.க.வின் கல்வியமைச்சர் தயாராக இல்லை. இத்திட்டத்தின் கீழ் பணியாற்றுகிற ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் சுமார் 20 ஆயிரம் பேருக்கு ஊதியம் வழங்க முடியாமல் தமிழக அரசே அந்த நிதிச்சுமையை ஏற்று வருகிறது.

**ஊழலற்ற ஆட்சி**

தி.மு.க. ஆட்சி அகற்றப்பட்டு த.வெ.க. ஆட்சியில் ஊழலுக்கு எந்தவகையிலும் இடமில்லை என்கிற நோக்கத்தோடு, வெளிப்படைத்தன்மையுடன் ஆட்சி நடைபெற்று வருகிறது. இதன்மூலம் பெருந்தலைவர் காமராஜர் கண்ட கனவு நிறைவேறியிருக்கிறது. இதைக் கொண்டாடுகிற வகையில் தான் ‘லஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்’’ என்கிற இயக் கத்தை காமராஜர் பிறந்தநாளில் தமிழகமெங்கும் காங்கிரஸ் கட்சி பரப்புரை மேற்கொண்டதை இக்கூட்டம் குறிப்பிட விரும்புகிறது. இது போல் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**Owner Publisher & Editor C.SARAVANAN No : 6/21,Namasivaya Street,Old Washermen pet,Chennai-600021**
**Printed by E.Sudeeshkumar at Chennai Offset Printers, No.19/1, 21/2, Kitabath khan Bhadur Street, Ellies Road, Chennai-600002. Mail.id. neethidevadhai.rediffmail.com. Phone No.9884956002**

# ராகுல் காந்தியிடம் வாழ்த்து



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாவட்ட தலைவர்களுக்கு மாமல்லபுரத்தில் நடந்த புத்தாக்க பயிற்சி முகாமில் கலந்து கொண்ட இந்திய பராளுமன்ற எதிர்கட்சி தலைவர் ராகுல் காந்தியை வசந்த் தொலைக்காட்சி நிருபர் வெங்கட் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# ராகுல் காந்தியிடம் கராத்தே செல்வம் சுகன்யா செல்வம் வாழ்த்து



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாவட்ட தலைவர்களுக்கு மாமல்லபுரத்தில் நடந்த புத்தாக்க பயிற்சி முகாமில் கலந்து கொண்ட பராளுமன்ற எதிர்கட்சி தலைவர், வருங்கால பாரதம் திரு. ராகுல் காந்தி எம்.பியை மத்திய சென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் கராத்தே செல்வம், அவரது துணைவியாரும் சென்னை மாமன்ற 109 வது வார்டு கவுன்சிலருமான திருமதி சுகன்யா செல்வம் ஆகியோர் தங்களது குழந்தைகளுடன் சென்று வாழ்த்து பெற்றார்கள்.